# வாக்குமூலம்
# தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
# வழக்கு எண் : SC.No. 443/2016
# வழக்கு சாட்சி PW–10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சபாபதி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பொன்னுலிங்கம் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | ஏரல் | வயது | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 6th, 2026.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் ஏரல் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் 2013 ம் வருடம் கடையநல்லூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, சொக்கம்பட்டி காவல்நிலையத்தில் கூடுதல் பொறுப்பு பார்த்து வந்தபோது, கடந்த 16.02.2013 ம் தேதி, காலை 10.00 மணிக்கு சொக்கம்பட்டி காவல் நிலைய குற்றஎண்.25/2013 வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

அன்றைய தினம் காலை 10.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் கே.முருகன் மற்றும் எஸ்.முருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.3** ஆகும். பின்னர், சாட்சிகள் மருதையா, ராஜேந்திரன், தங்கப்பாண்டி, முகேஷ்,

சாமித்துரை, எஸ்.முருகன் மற்றும் எஸ்.முருகன், உதவி ஆய்வாளர் சரவணக்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அன்றைய தினம் வழக்கின் எதிரி ஆறுமுகச்சாமி என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 01.03.2013 ம் தேதி வழக்கின் இதர எதிரிகள் திருநெல்வேலி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமின் பெற்றுள்ளார். 08.03.2013 அன்று திருநெல்வேலி மாவட்ட காவல்கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவுப்படி வழக்குகோப்பினை மேல்விசாரணைக்காக புளியங்குடி துணைக்காவல்கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.07 14:48:06 +0530